மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவர்களுக்கு உதவியாளர்களாக இருப்ப தற்குத்தான் தேர்வு நடத்தப்படும்.

### 6. ஒழுங்குப் பிரச்சினை.

மானியக் கோரிக்கைகள் தொடர்பான கொள்கை விளக்கக் குறிப் புகள் முன்கூட்டியே உறுப்பினர்களுக்குக் கிடைக்காதது குறித்து.

திரு. உ. ரா. வரதராசன் : பாய்ன்ட் ஆப் ஆர்டர். அலுவல் சம்பந்தப்பட்டது. மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. இதே மன்றத்திலே நான் எழுப்பி, மானியக் கோரிக்கைகள் மீதான விளக்கக் குறிப்புகள் எங்களுக்கு இரண்டு தினங்களுக்கு முன்பாக தர வேண்டுமென்று சொன்னேன். நீங்களும் அப்படி சேர்ப்பிக்க வேண்டும் என்று தெரிவித்தீர்கள். நேற்றைய தினம்கூட மதிப்பிற் குரிய உறுப்பினர் தீட்சிதர் அவர்கள் இந்தப் பிரச்சினையைக் கிளப்பினார்கள். ஆனாலும், இன்றைக்கு விவாதத்திற்கான கோரிக்கைகள் சட்ட மன்ற அலுவலகத்திலே இருக்கின்ற எம். எல். ஏ.க்களுக்கு இரவு ஒன்பது மணிக்குத்தான் வந்திருக் கின்றன. காலையும், மாலையும் தொடர்ச்சியாக அவையினுடைய அலுவல் நடைபெறுகின்ற காரணத்தினாலே இவற்றைப் படிப்ப தற்கு ஏதுவாகக் கட்டாயமாக இரண்டு நாட்களுக்கு முன்பாகக் கிடைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று மீண்டும் உங்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கண்டிப்பாக ஏற்பாடு செய்யப் படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 7. மானியக் கோரிக்கைகள்—1989–90—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி*

#### (அ) கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.

மாண்புமிகு திரு. பெரன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 29 தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்—என்ற தலைப்பின்கீழ் ரூ. 30,03,84,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."